# முல்லேத்.காட்டில் ராணுவத்தின் முழுச் சக்தியும் பிரயோகம்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 28 இதழ் 214
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 13-9-1991

(கொழும்பு)

முல்லேத்தீவு - மணல்ஆறு காட்டில் இடம்பெறும் போரில் இராணுவ தளபதி ஹமில்டன் வனசிங்க தலேமையில் முப்படைகளின் முழுச் சக்தியும் பயன்படுத்தப்படுவதாகவும் இது ஆனேயிறவுப்போரைவிட மிகப்பெரும் யுத்தமென கேரி

[3ம் பக்கம் பார்க்க]

## 4 அதிகாரிகள்; 31 படையினர் பலி

(மணலாறு)

முல்லேத்தீவு - மணலாறு பகுதியில் இதுவரை இடம்பெற்றயுத்தத்தில் 4 அதிகாரிகள் உட்பட முப்பத்தைந்து படையினர் கொல்லப்பட்டதாக இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மோதலில் 47 படையினர் படுகாயமடைந்துமுள்ளனர்

[3-ம் பக்கம் பார்க்க]

## 3இராணுவத்தினர் கைதாகி விசாரணை

[வவுனியா]

வவுனியா பூமாங்குளம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக 3 இராணுவத்தினரை வவுனியா பொலிசார் தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

பூமாங்குளம் பகுதியில் கடந்தவாரம் இரு பொதுமக்கள் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை யடுத்து இந்தவிசாரணை மேற் கொள்ளப்பட்டுவருகிறது.

[153]

## ★ மட்டக்களப்பில் அதிரடி

# சித்தாண்டி பொலிஸ் நிலேயம் விடுதலேப்புலிகளிடம் வீழ்ந்தது

## 10 பொலிஸ் பலி; பலர் தப்பி ஓட்டம்

[மட்டுநகர்]

**மட்டக்களப்பு - சித்தாண்டிப் பொலிஸ் நிலேயம் புலிகளினுல் கைப்பற்றப்பட்டதுடன் பல ஆயுதங்களும் மீட்கப்பட்டன. பத்துப் பொலிஸார் பலியானுர்கள். பொலிஸாரில் ஒருவர் புலிகளினுல் கைது செய்யப்பட்டதுடன் ஏனேயவர்கள் தப்பியோடிவிட்டனர். புலிகள் தரப்பில் ஆறு போராளிகள் வீரமரணமடைந்தனர்.**

மட்டக்களப்பிலுள்ள சித்தாண்டிப் பொலிஸ்நிலேயம் மீது நேற்று அதிகாலே 1-30 மணியளவில் விடுதலேப்புலிகள் அதிரடித் தாக்குதலே நடத்தினுர்கள். சுமார் ஒன்றரை மணிநேரம் நடத்தப்பட்ட தாக்குதலின்பின் இப்பொலிஸ் நிலேயம் விடுதலேப்புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது

பொலிஸ் நிலேயம்மீ தான தாக்குதலின்போது பொலிஸ் நிலேயத்திலிருந்து 300 யார் தூரத்திலுள்ள முறக்கொட்டாஞ்சேனே இராணுவமுகாம் மீதும் விடுதலேப்புலிகள்தாக்குதலே நடத்தினுர்கள்.

இதேநேரம் பொலிஸ் நிலேயத்திலிருந்து 800 யார் தூரத்திலுள்ள இராணுவ முகாம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது

இத்தாக்குதலில் பத்துப் பொலிஸார் கொல்லப்பட்டதுடன் பொலிஸாரில் ஒருவர் கைது செய்யப்பட்டார். பலர் தப்பியோடிவிட்டனர்.

இப்பொலிஸ்நிலேயம் புலிகளிடம் வீழ்ச்சியடைந்ததைத்

(3ம் பக்கம் பார்க்க)

## ஐந்து சிப்பாய்கள் ஆனேயிறவில் பலி

[யாழ்ப்பாணம்]

ஆனேயிறவு இராணுவத்தினர் மீது புலிகள் நடாத்திய தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் பலியானுர்கள்.

கடந்த 9ம் திகதி காவல

(4-ம் பக்கம் பார்க்க)

## 'ஒப்பரேஷன் 'விதுலி பஹர'

(கொழும்பு)

தற்போது மணலாறு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைக்கு 'விதுலி பஹர' (மின்னல் தாக்குதல்) என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளதாக கேர்ணல் சரத் முனசிங்க பத்திரிகையாளர் மாநாட்டில் நேற்று தெரிவித்தார்.

## லலித்தை சிலர் ஏமாற்றி விட்டார்கள்

(கொழும்பு)

லலித் அத்துலத்முதலியை சிலர் ஏமாற்றி விட்டார்கள் அவர் ஏமாறுவது இது முதற் தடவையல்ல என சுதந்திரக் கட்சி எம் பி. திரு. ஸ்ரான்லி திலகரத்ன தெரிவித்துள்ளார்.

ஜே வி பி இன் கிளர்ச்சி உச்சக் கட்டத்திலிருந்தபோது விஜயவீர, கமநாயக்க வின் சார்பில் தாம் பேசுவ

(3-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பாடலே தமிழக அரசு நீக்கியது

[சென்னே]

திருச்சி பல்கலேக் கழகத்தில் எம் ஏ தமிழ் பட்டப்படிப்பு பாடநூலில் இருந்து விடுதலேப் புலிகளின் புகழ் பாடும் பாடலொன்றை தமிழக அரசு நீக்கியுள்ளது.

திருச்சி பாரதிதாசன் பல்கலேக் கழகத்தில் கவிஞர் அப்துல் ரகுமான் புலிகளின் வீரத்தை உயர்த்தியும், இந்தியப் படைகள் இலங்கையில் நடாத்திய அட்டூழியங்களேக் கண்டித்தும் எழுதிய 'சுட்டு விரல்' என்ற பாடலே எம். ஏ. பட்டப்படிப்பிற்காக

[3ம் பக்கம் பார்க்க]

## ஈழப் போராளிகளே அகற்ற தமிழக முதல்வர் முடிவு

(கொழும்பு)

தமிழ்நாட்டிலிருந்து இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகள் முற்றுக நீக்கப்படுவார்கள். இது சாத்தியப்படாவிட்டால் தேசிய பாதுகாப்புச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

## சிறிசேன குரே அறிவிப்பு

[கொழும்பு]

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து எட்டு உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டது குறித்து கட்சியின் செயலாளர் நாயகம்

3ம் பக்கம் பார்க்க]

## இலங்கை அரசு மீதும் விசாரணை நடாத்தவேண்டும்

(சென்னே)

ராஜீவ்காந்தி கொலேயில் இலங்கை அரசின் பின்னணி ஏதும் உண்டாவென சி.பி ஐ குழு விசாரணே நடத்தவேண்டுமென முன்னுள் தமிழக பொலிஸ் மா அதிபர் திரு. டி. ஜி. பி.மோகனதாஸ் கூறியுள்ளார்

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்; இலங்கை-

(4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை - இந்திய கூட்டு திட்டமில்லே

(புதுடில்லி)

விடுதலேப்புலிகளுக்கு எதிராக இலங்கையும் - இந்தியாவும் இணேந்த கூட்டு நடவடிக்கைக்கான திட்டம் எதுவும் இல்லே என இந்திய வெளிவிவகார இணேயமைச்சர் திரு. எட்வர்டோ பெரேரோ தெரிவித்துள்ளார்.

[4ம் பக்கம் பார்க்க]

## லலித் குழுவிற்கு புதியதடை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட திரு. அத்துலத் முதலி உட்பட்ட எட்டுப் பேரும் ஐ தே. கட்சியின் சின்னத்தையோ அதன் பெயரையோ பயன்படுத்த அதிகாரமில்லேயென அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்

திரு லலித் குழுவினர் கூட்டங்களிலும் பொது இடங்களிலும் ஐ தே. கட்சியின்

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகள் - தொண்டா பேச்சுகள் இல்லே

(கொழும்பு)

விடுதலேப் புலிகளுக்கும் அமைச்சர் தொண்டமானுக்குமிடையில் சமாதானப் பேச்சுக்கள் எதுவும் உத்தியோகபூர்வமாக இடம்பெறவில்லேயென அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அப்படியான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லே யென்றும் அவர் கூறினுர்.

1661

## வரி விளம்பரம்

### கல்வி

பாலராசிரியர் பயிற்சி விரைவில் ஆரம்பமாகின்றது. க. பொ. த. சா/த. கடைசித் தகைமையாகும். நேரில் வர முடியாதோர் கடித வழியிலும் கற்கலாம். பாலராசிரியர் சங்கம்; மே/பா. உயர்கலைக்கல்லூரி; 73, பருத்தித்துறைவீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
(சி 5321)

### C. C. C.

Apprenticeship in Pharmacy என்னும் கற்கை நெறிக்குரிய வகுப்புகள் எமது நிறுவனத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்பதனை பழைய புதிய மாணவர்களுக்கு அறியத்தருகின்றோம். மேலதிக விபரங்களுக்கு தொடர்கொள்ளவும்: நிர்வாகி, City Clinical Consultation, Jaffna.
[சி-5337]

### பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பவள விழாவைக் கொண்டாடி வரும் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை 14ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4-30 மணிக்கு வித்தியாலயத்திலுள்ள அம்பிகை பாகன் அரங்கில் நடைபெறும்.

அதிபர் சி. சிவசரவணபவன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகக் கல்விப்புலப் பேராசிரியர் வ. ஆறுமுகம் கலந்து கொள்வார்.

பரிசில்களைத் திருவாட்டி செல்வராணி ஆறுமுகம் வழங்குகின்றார். யாழ். கல்விக் கோட்டத்தின் உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் வாழ்த்துரை வழங்குவார். மாணவ மாணவிகளின் கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

---

## இராசி பலன்

13 : 09 : 1991
வெள்ளிக்கிழமை
தமிழுக்கு ஆவணி 28

பஞ்சமி பி. ப. 2-20 வரை!
விசாகம் பி. இ. 4-27 வரை

சுபநாள் இராகுகாலம் காலை 10-33 முதல் 12-03 வரை.

சுபநேரம் காலை 6-08 முதல் 7-33 வரை. சித்தயோகம்.

மேடம்: நல்லோர் சிநேகம், வருமான உயர்வு, குடும்ப மகிழ்ச்சி.

இடபம்: தொழில் முதலீடு. காரியசித்தி, தானதர்மம்.

மிதுனம்: கற்பனை மிகுதி, இனசனப்பகை, நெடும் பயணம்.

கடகம்: தப்பபிப்பிராயம், குடும்பகலகம், பதட்டம்.

சிங்கம்: புதுப் பொருள் சேர்க்கை, பதவி உயர்வு, பணவரவு.

கன்னி: விதண்டாவாதம், குறைகேட்டல், பணமுடை.

துலாம்: வித்தை விருத்தி, நண்பர் உதவி, தாயன்பு.

விருச்சிகம்: கைப்பொருள் நஷ்டம், பயண அலைச்சல், மனச்சுமை.

தனுசு: தொழில் குறைவு, அதிகாரம், குடும்ப மகிழ்ச்சி.

மகரம்: வாக்குகலகம், சகோதரர்பகை, காரியதடை.

கும்பம்: மனக்கலக்கம், தனிமையடைதல், அவசர போக்கு.

மீனம்: பகைவர் தொல்லை, அபிப்பிராயபேதம். உடல் சோர்வு

ஜோஸ்யர்

---

## 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேஷ்டி அழைப்பும்



உயர்திரு
### கந்தையா தம்பையா
(ஓய்வுபெற்ற தபால் அத்தியட்சகர், G. P. O.)

அவதாரம்: 01-12-1903
அமரத்துவம்: 16-08-1991
திதி: பூர்வபக்க ஷஷ்டி

'வையத்துள் வளமுடன் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வமாகின்றான்' என்ற அவதாரக் கோட்பாட்டுக்கு எடுத்துக் காட்டாகத், திகழ்ந்து தெய்வமாகிவிட்ட எங்கள் அன்புத் தந்தையே! உங்களை என்றென்றும் பக்தி சிரத்தையுடன் நினைவு கூருகின்றோம்.

சாந்தி! சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்னாரின் அந்தியேஷ்டி, சபிண்டீகரண சமயக் கிரிகைகளும், மதிய போசனமும் அவரது இல்லத்தில் நாளை (14-09-1991) நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்போடு வேண்டியமைகிறோம்.

இங்ஙனம்
**பிள்ளைகள்**

முதலியார் வளவு,
வதிரி, கரவெட்டி.
(சி 5311)

---

## ஓராண்டு நினைவு நாள்



ஆண்டவன் படைப்பு:
05-09-1955

அரக்கர் அழிப்பு:
24-08-1990

திதி:
13-09-1991

### சொ. மதியாபரணம் பத்மஜினி
(சந்திரிகா)

உற்றார் கதறியழ உடன்பிறந்தார் துடிதுடிக்க அக்காளுடன் மக்கள் அக்கரையில் போயொதுங்க செத்தாலும் உன்மடியில் தலைவைத்தே செத்திடுவேன் எத்தாலும் என்னுடனே வாழ்ந்து எம்வறுமை நீங்க பித்தாகி நின்றாயே! பிரிந்தனையே சந்திரிகா

ஓடிமறைந்ததுவோ ஓராண்டு இன்றுனக்கு!
கூடி ஒன்றாய் வாழ்ந்ததாமே!
குல விளக்கே ஏன்மறைந்தாய்?
இல்லத்து விடிவிளக்கு இருட்டறையில்
சரிந்ததுமேன்?
கள்ளமிலா உள்ளமதைக் காலன்
''ஷெல்'' வடிவில் கவர்ந்ததுமேன்?
சரித்திரம் படைத்தவள் சங்கமித்தாள் தீயுடனே!
என்ன கொடுமையிது!
இறைவா இது உந்தன் சோதனையோ?

ஆறாத்துயருறும்:
கணவன், பிள்ளைகள், தாய்,
சகோதரர், சித்தப்பா, சின்னம்மா
மச்சான்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

சொ. மதியாபரணம் (மணியம்)
இல. 12, கண்ணபுரம்,
கொட்டடி.
[சி-5333]

---

## பேராசிரியர் அ. துரைராஜாவுக்கு பாராட்டு விழா

காலம்: 13-09-1991 வெள்ளிக்கிழமை
பி. ப. 2-45 மணி

இடம்: கைலாசபதி கலையரங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

மங்கள இசை

| நாதஸ்வரம்: | தவில்: |
|---|---|
| கோண்டாவில் சகோதரர்கள் | தவில் சக்கரவர்த்தி |
| திரு. வி. கே. கானமூர்த்தி | என். ஆர். |
| திரு. வி. கே. பஞ்சமூர்த்தி | சின்னராசாவின் |
| | புதல்வர்கள் இணுவில் |
| | ரவீந்திரன், சுதாகரன் |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விழா அமைப்புக்குழு

(சி-5334)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின மடியில்:
24-08-1948

★

ஆண்டவன் அடியில்:
25-08-1990

### அமரர் ஏரம்பு துரைராசா

மண்கும்பான் கிராமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும், வேலணை தெற்கு கிராமசேவையாளருமாவார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
சகோதர, சகோதரிகள்,
மைத்துனர்மார், மருமக்கள்.

4-ம் வட்டாரம்,
மண்கும்பான்.
(சி-5284)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு:
08-08-1923

அநியாய அழிப்பு:
24-08-1990

### அமரர் செல்லப்பா திருநாவுக்கரசு

(முன்னைநாள் மண்கும்பான் கிராமசபை உறுப்பினர்)

மங்காத மணிவிளக்காக குன்றாத சுடர் விளக்காக
குன்றின் மேல் தீபமாக எங்கள் குடும்பச்
சுடராக விளங்கிய எங்கள் அன்புத் தெய்வமே
அரக்கரின் ஆக்கிரமிப்பால் எம்மை எல்லாம்
ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட
தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

5ம் வட்டாரம்,
மண்கும்பான்.
(சி-5315)

# 31-ம் நாள் நினைவஞ்சலி



## திருமதி தம்பியையா தங்கமுத்து

தோற்றம்: 1920-08-'8 மறைவு: 1991-08-14

ஜனனமும் மரணமும் இயற்கையே ஆயினும்
இன்னல் தான் மாறுமோ?
இன்முகம் மறக்குமோ?
நெஞ்சமும் நினைவும் நிலைத்துள்ள வரையும்
எம்மிதயத் துடிப்பினில் என்றென்றும் வாழ்வீர்.
"ஓம் சாந்தி".

அந்திமக் கிரியைகளில் கலந்து அஞ்சலி செலுத்திய அனைவரையும் இதயத்தில் வைக்கின்றோம்.

அன்னையின் பிரிவால் துயருறும்!
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

4-ம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(சி-5323)

# வீரவணக்கம்



## அக்கினோ

[இராசரட்ணம் கலைவாணி]

(கைதடி, நுணுவில்)

வீர வணக்கம்: 08-09-91

உறுதி தளராது உறைவிடம் தேடிய
வீரப்புலி அக்கினோவே
தமிழ் மானம் காக்க
வீறு கொண்டு விழித்தவளே
களம் நோக்கிச் சென்ற
களப்புலியே
தமிழ் மண்ணுக்காக தேசத்தை
நேசித்தவளே
எதிரிகளைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்த
புதுமைப்புலியே
மண்ணையும் மக்களையும் காக்க
தேசத்தை விட்டுச் சென்ற எம்
இனியவளே உன் பாதச்சுவடுகள்
பட்ட இடமெங்கும் பசுமையாக இருக்கிறது
உன் அன்பான பேச்சினால் சகபோராளிகள்
மனதில் அழியாது இடம் பெற்றாய்
நீ விட்டுச் சென்ற பயணத்தை
நாம் தொடர்வோம்
உன் கல்லறையில் கூட நாளை
ஓர் காவியம் பிறக்கும்!

நண்பர்கள்.

[சி-5339]

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமத்தில் உள்ள சகல விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களிற்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை மானிப்பாய் மெமோரியல் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

## புலிகளின் பாடலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடநூலில் சேர்க்கப்பட்டிருந்தது.

இதை தமிழக அரசு கடந்த செவ்வாய்க்கிழமை நீக்கியுள்ளது. (சி)

## மட்டக்களப்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து அங்கிருந்து பல ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இவ்வெற்றிகரமான தாக்குதலில் வாமன் [மா தேவன், காரைதீவு], ஜெயகணேஷ் (ந ரஜனிகாந்த், கல்முனை), சுந்தரம் [க. யோகராசா, கோரகல்லிமடு], மதன் [எஸ். சோமசுந்தரம், மகிழூர்முனை], பிரேம்குமார் [வி. ரவிச்சந்திரன், விநாயகபுரம்], வில்லியம் செல்வராஜா [அம்பலாந்துறை] ஆகிய 6 போராளிகள் விடுதலைப்புலிகள் தரப்பில் வீரமரணமடைந்தனர்

இவர்களுக்கு புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்

## முல்லை.காட்டில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜன் முனசிங்க தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவுக் கடல்பகுதியில் பாரிய கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளன. கரையோரம் எங்கும் கடற்படையினர் தரையிறக்கப்பட்டுள்ளனர். பல்லாயிரக்கணக்கான படையினரும், 13றகும் மேற்பட்ட விமானங்களும் இத்தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இக்காட்டுப்பகுதியில் புலிகளின் கண்ணிவெடி, மிதிவெடி தாக்குதலினால் படையினரின் முன்னேற்றம் பெருமளவு தடைபட்டுள்ளதை படையினரும் ஒப்புக்கொண்டுள்ளனர். முப்படைகளையும் எதிர்த்துப் புலிகள் மிக உக்கிரமாகத் தாக்குதலை நடாத்தி வருகின்றனர். (சி 153-56)

## லலித்தை சிலர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாக கே. சி. செனநாயக்கா கூறியதை நம்பி லலித் ஏமாந்தவர் என்பது மக்களுக்கு இன்றும் நினைவிருக்கும்.

திரு லலித் ஏமாற்றப்படக்கூடாது அதே போல் அவர் சுதந்திரக்கட்சியையும் ஏமாற்றக்கூடாது. தன்னுடன் உள்ள அதிருப்தியாளர்களின் விபரங்களை அவர் சபாநாயகரிடம் எடுத்துக் கூறட்டும் என்றும் அவர் தெரிவித்தார். (சி)

## சிறிசேனகுரே

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. சிறிசேனகுரே நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கும், தேர்தல் ஆணையாளருக்கும் அறிவித்துள்ளனர்.

## 4 அதிகாரிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் தெரிவிக்கப்படுகிறது. கடந்த இரு வாரமாக இப்பகுதியில் கடும்மோதல் நடைபெற்று வருகிறது. (சி)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## லெப்டினன் நெப்போலியன்

[ச. விக்கினேஸ்வரன், விக்கு]

தாயின் மடியில்: 29-07-1971 தாயக மண்ணிற்காக: 13-09-1990

தாவடி இ. த. க. பாடசாலை யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி, தமிழ்நாடு (மதுரை) சென்மேரீஸ் கல்லூரி விவேகானந்தா கல்லூரி, (வைத்தியத்துறை) மாணவன்

13-9-90 அன்று யாழ். கோட்டையில் வீரமரணம் அடைந்த 13 போராளிகளை நினைவுகூருகின்றோம்.

குடும்பத்தினர்

ஸ்ரீ விக்னேஸ்வரா,
120, தமிழரசுவரன் வீதி,
யாழ்ப்பாணம்.

விக்கினேஸ்வரன் வீதி,
தாவடி.


(சி-5288)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி ந. முத்துராணி (ரமணி)
[யாழ். பல்கலைக்கழக மாணவி,
ஆசிரியர், மண்டைதீவு]
செல்வி ஏ. ஹேமானந்தி

ஜவரின் உதிர்வு: 25-08-1990



திருவாளர் சி. ஏகாம்பரம்
திருமதி ஏ. மதுரைராணி
செல்வி ஏ. துஷ்யந்தினி

திதி: 13-09-1991

ஓராண்டு சென்றபோதும் எங்கள் உள்ளத்தின்
ஒளித்தீபமென சுடர்விடும் உங்களை எப்படி மறப்போம்!

மு. நவரத்தினராசா
(முன்னைநாள் கிராம அதிகாரி)
குடும்பத்தினர்

மருத்துவமனை வீதி,
மண்டைதீவு.

(சி-5338)

# லலித் குழுவின் கூட்டம் பற்றி 'டெய்லி ஒப்சேவர்' கருத்து

[கொழும்பு]

லலித், காமினிகுழுவினரால் நுகேகொடையில் நடாத்தப்பட்ட கூட்டத்தில் மக்களைவிட வாகனங்களே அதிகமென "டெய்லி ஒப்சேவர்" பத்திரிகை தெரிவித்துள்ளது.

கூட்டத்திற்கு ஆட்களைச் சேர்ப்பதற்காக சுதந்திரக்கட்சியின் வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டன. சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களும் கூட்டத்திற்கு கொண்டுவரப்பட்டனர்.

லலித் குழுவினர் பத்திரிகையாளர் மாநாட்டில் கூறிவந்தது போன்று ஆச்சரியமான சம்பவங்கள் எதுவும் அங்கு நடக்கவில்லை. ஐ.தே. கட்சியிலிருந்து நீக்கப்பட்ட 8 பேரையும் தவிர புதிதாக எந்த அமைச்சரையோ, எம் பிக்களையோ அங்கு காணமுடியவில்லை

தங்கள் கூட்டத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான தந்திரமாகவே, கூட்டமேடையில் புதிய முகங்களை காணலாமென லலித் குழுவினர் பிரசாரம் செய்துவந்ததாகவும் 'டெய்லி ஒப்சேவர்' குறிப்பிட்டுள்ளது (இ)

# லலித், பிரேமா போட்டிக்கூட்டம்

[கொழும்பு]

தென்பகுதியிலும் தற்போது திரு. லலித் அத்துலத்முதலி தலைமையிலான போட்டிக்குழுவும் ஜனாதிபதி பிரேமதாஸாவும் கூட்டங்களை நடாத்த ஆரம்பித்துள்ளனர்.

ஜனாதிபதியை எதிர்த்து லலித், காமினி கோஷ்டியினரும், இவர்களது துரோகத்தனத்தை எதிர்த்து ஜனாதிபதி தலைமையிலான கோஷ்டினரும் நடத்தத்தொடங்கியுள்ளனர்

நுகேகொடையில் நடந்த செவ்வாய் லலித் தலைமையிலான கூட்டத்தை குழப்ப முயன்றும் அது முடியாமல் போனதும் தெரிந்ததே. (இ)


## கம்பியூட்டர் கல்வி

- Diploma in Data Processing and Computer Programming in Basic Language.
- d Base III+, Lotus 1-2-3, Word Processing

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்:

14-9-91 10-00 a. m.
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

13-09-91 10-00 a. m.
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்)

கட்டணம் பகுதிபகுதியாகச் செலுத்தலாம்.
தமிழில் விளக்கம் அளிக்கப்படும்.
பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கட்கு:

UNIKCO COMPUTER CENTRE

37, Clock Tower Road, Jaffna.

[வெலிங்டன் சந்திக்கு வடக்கு பக்கமாக உள்ள மேல்மாடி] [எ-1515]


# இந்திய அரசியலில் புலிகள் தலையீடு!

[புதுடில்லி]

இந்தியாவின் அரசியல் நடவடிக்கையில் புலிகளின் தலையீடு இருப்பதாக இந்திய அரசு சந்தேகம் கொண்டுள்ளதாக 'ஏசியா வீக்' தெரிவித்துள்ளது.

இதேவேளை புலிகளுக்கு எதிராக ராஜகந்திர, இராணுவ அழுத்தங்களை கொடுக்கவும் இந்தியா முயன்றுவருகிறது.

திரு கிட்டு பிரிட்டனிலிருந்து வெளியேற்றப்பட்டதற்கு இந்தியாவின் பின்னணியே காரணமெனவும் 'ஏசியாவீக்' குறிப்பிட்டுள்ளது. [சி]

## போக்குவரத்து கண்காணிப்பு பிரிவின் புதிய ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

அனேக மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க வவுனியா சந்தைக்கு செல்வதற்கு மாவட்ட ரீதியாக அனுமதிப்பது சம்பந்தமாக சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக தமிழீழ போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு அறிவித்துள்ளது.

புதிய ஏற்பாட்டின்படி ஒவ்வொரு மாவட்டத்தை சேர்ந்தவர்களும் வாரத்தில் இரு தடவை மாத்திரமே பிரயாணம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

வவுனியா மன்னார் மாவட்டங்கள் சனி, ஞாயிறு; கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் திங்கள், செவ்வாய். யாழ்ப்பாணம் மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்கள் புதன், வியாழன் ஆகிய ஒழுங்கில் அனுமதிக்கப்படுவர்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் ஒவ்வொரு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஒழுங்கில் அனுமதி வழங்கப்படும். வெள்ளிக்கிழமைகளில் மேலதிகமாக இடம் இருப்பின் மாத்திரம் வுனியா மாவட்டத்தை சார்ந்தவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

ஊரடங்குச்சட்டம் போன்ற தவிர்க்க முடியாத காரணங்களால் ஒரு மாவட்டத்திற்கு ஒருநாள் வீதம் குறிப்பிட்ட நாள் செல்லவேண்டிய மாவட்டத்துடன் இணைந்து செல்ல அனுமதி வழங்கப்படும்.

## லலித் குழுவிற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சின்னம் பெயர் பயன்படுத்துவது தவறானது என்றும் கூறினர்

# சவான் - ஜெயலலிதா சந்தித்து பேசுவர்

(சென்னை)

இந்திய உள்துறை அமைச்சர் திரு எஸ். பி. சவானை தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா நாளைமறுதினம் சந்தித்துப் பேசவுள்ளார்

தமிழக பொலிஸ் துறையை மறுசீரமைப்பது தொடர்பாக அவர் பேச்சு நடத்தவுள்ளார். இதன்போது தமிழகப் பொலிசாருக்கு நவீனரக ஆயுதங்களை வழங்குமாறும் முதல்வர் கோரவுள்ளார்.

இதேவேளை புலிகளின் ஆதரவாளர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் ஜெயலலிதா தெரிவித்துள்ளார். [சி]

## ஐந்து சிப்பாய்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரண் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்ட இராணுவத்தினரே புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களாவார்கள்.

## ஈழப்போராளி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளையில் இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படும் 18 பேர் நேற்றுமுன்தினம் தமிழ்நாடு பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## இலங்கை-இந்திய

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இதேவேளை ராஜீவ் கொலை விசாரணைகளில் இலங்கை அரசு தங்களுக்கு நல்ல ஒத்துழைப்பை வழங்கி வருவதாகவும் அவர் நேற்று மக்களவையில் தெரிவித்தார். (சி)

## இலங்கை அரசு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய ஒப்பந்தத்தைஎதிர்த்து நாட்டைவிட்டே பயணம்செய்தவர் திரு பிரேமதாஸா. எனவே அந்தக் கோணத்திலும் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

ராஜீவின் உயிருக்கு ஆபத்து இருப்பதாக முன்கூட்டியே எச்சரித்தவர் பலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாசீர் அரபாத். ராஜீவ் கொலை வழக்கு விசாரணை யசீர் அரபாத்திலிருந்தே தொடங்கியிருக்கவேண்டும். அதனை புலனாய்வுக் குழு ஏன் முதலில் செய்யவில்லை? தற்போது அவர்கள் விசாரணையை ஒரு கோணத்திலேயே நடத்துவதாகவும் திரு. மோகனதாஸ் குறிப்பிட்டுள்ளார். (இ)

## 90 ம் நாள் நினைவஞ்சலி

| தாயின் மடியில்: | | தயாக மண்ணில்: |
|---|---|---|
| 06 |  | 17 |
| ★ | | ★ |
| 02 | | 06 |
| ★ | | ★ |
| 1973 | | 1991 |

### வீரவேங்கை திரண

[செல்வி ஜெயா பாலசுப்பிரமணியம்]

[தமிழீழ மண்மீட்பிற்காக வவுனியா பூவரசங்குளம் சிறிலங்காப் படைமுகாம்மீது 17-06-91ல் நடைபெற்ற நேரடி மோதலில் வீரமரணத்தை தழுவினார்]

மண்மீட்கும் பணியினிலே மருத்துவப் பிரிவினிலே
தன்பங்கை அர்ப்பணிக்கத் தமிழீழப் புலிப்படையில்
இணைந்துநின்ற எங்கள் ஜெயா 'திரண' வெனும்பெயரில்
முனைந்துநின்று தீவிரமாய் களம்புகுந்து போராட
விரும்பியே துப்பாக்கி வீரமுடன் ஏந்தி நின்றாய்!
கொக்காவில் முகாம் புகுந்து கொக்கரித்த ஆமிதனை
தாக்கியே தலைதெறிக்க விரட்டியே அடித்தாயே
மாங்குளம் முகாம் புகுந்து மண்டியிட வைத்தாயே
திங்கு செறி பூவரசங்குள முகாம் தகர்க்கத்
தீரமுடன் போராடும் வேளையிலே 'ஷெல்' தாக்கி
வீரமுடன் மரணத்தைத் தழுவினையே திரணவே!
""என் மரணம் கண்டிங்கே எவருமே அழாதீர்கள்
என் கொள்கை தனைத்தொடர்ந்து கடைப்பிடிப்பீர்''
- என்ற
உன்வாக்கை நாம் மறவோம் உரிமைதனை மீட்டெடுக்கும்
வன்போரில் பங்கு கொள்வோம், வாழிய நம் தமிழீழம்.

14-09-91 சனிக்கிழமை காலையில் நடைபெறும் நினைவஞ்சலி வைபவத்தில் சகலரையும் சமுகமளிக்குமாறு அழைக்கின்றோம். தனிப்பட்ட முறையில அழைக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

குடும்பத்தினர்,
கிராம மக்கள், சக போராளிகள்.

அல்வாய் மேற்கு,
அல்வாய். [சி 4708]

# கப்பலில் வரும் பொருட்களில் களவு?

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரும் தனியார் துறையினரின் பொருள்கள் சப்பல்களில் வரும்போது பெருமளவு குறைவதாக வர்த்தகர்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

இப்பொருள்கள் கொழும்புத் துறைமுகத்தில் ஏற்றப்படும்போது களவுபோயிருக்கலாமென கப்பல் மாலுமிகள் தெரிவிப்பதால் எவர் மீதும் இது குறித்து நடவடிக்கை எடுக்க முடியாமலிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (எஸ்)

## மரண அறிவித்தல்

### பணியர் அம்பலவாணர்
(கிளாக்கர்)

காரைநகர் கோவளத்தை சேர்ந்தவரும் தற்போது 89/1, பிறவுண் வீதியில் வசித்தவருமான ம. அம்பலவாணர் காலமானார். அன்னார் காலஞ்சென்ற ஆச்சிமுத்துவின் அன்புக் கணவரும், திருச்சிற்றம்பலம் [இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்] தியாகராசா [இளைப்பாறிய ஆசிரியர்], காலஞ்சென்ற திருநாவுக்கரசு, திருஞானசம்பந்தன், திருநீலகண்டன் [பிராந்திய முகாமையாளர், டார்லி பட்லர் அன் கோ லிமிட்], திருவாதவூரர் [பொறியியலாளர், லண்டன்] ஆகியோரின் அன்புத் தந்தையும், சாவித்திரிதேவி, மஹாலக்ஷ்மி, பராசக்தி, ராஜேஸ்வரி, தெய்வீகராணி ஆகியோரின் அன்பு மாமனுருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை 8-00 மணியளவில் மேற்குறிப்பிட்ட இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. திருச்சிற்றம்பலம்.

89/1, பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம் [சி- 5341]

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு செப்ரெம்பர் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News Paper at the General Postoffice Sri Lanka under Licence Number B/10336/81.